| 01 | பொது முகாமைத்துவம் மற்றும் தாபனச் செயற்பாடுகள் | அரச தாபன விதிக் கோவையின் I, II, III, IV, V, VII, VIII, IX, XII, XIII, XIV, XXIV, XXVIII, XXX மற்றும் XXXI ஆகிய அத்தியாயங்கள் மீது விசேட கவனத்துடன், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகள் I, III, IV, V, VI, VIII, X மற்றும் XII ஆகிய அத்தியாயங்கள் மீது விசேட கவனத்துடன் |

| *பாட இலக்கம்* | *பாடம்* | *பாட உள்ளடக்கம்* |
|---|---|---|
| 02 | நிதிப் பிரமாணங்கள் | அரசின் நிதிப் பிரமாணக் குறிப்பின் 1 ஆம் பகுதியின் I, II, V, VIII, XII மற்றும் XIV ஆகிய அத்தியாயங்கள் மீது விசேட கவனத்துடன் |
| 03 | கல்வி மறுசீரமைப்பு மற்றும் கல்விச் சட்டம் | பரீட்சை விண்ணப்பதாரர்களது கீழே குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைச் சட்டங்கள் மற்றும் பாராளுமன்ற சட்டங்கள் தொடர்பிலான அறிவு பரிசோதிக்கப்படும்.<br>i. 1972 கல்வி மறுசீரமைப்பு (கல்வியின் புதிய பாதை)<br>ii. 1981 கல்வியின் வெண் பத்திரம்<br>iii. 1992 தேசிய கல்வி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கை<br>iv. 1997 புதிய கல்வி மறுசீரமைப்பு<br>v. 1999 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய கல்வி மறுசீரமைப்பு (ஆரம்ப, இடைநிலை மற்றும் க.பொ.த (உ.த))<br>vi. 1976 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க,பொதுப் பரீட்சைகள் (திருத்தம் செய்யப்பட்ட) சட்டத்தின் திருத்தம் செய்யப்பட்ட 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பொதுப் பரீட்சைகள் சட்டம்<br>vii. 1986 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசிய கல்வி நிறுவகச் சட்டம்<br>viii. 1986 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, கல்வியியல் கல்லூரிச் சட்டம்<br>ix. 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டம்<br>x. 1997 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, தேசிய ஆசிரியர் கல்வி அதிகாரசபைச் சட்டம்<br>xi. 13 ஆம் திருத்தம் மற்றும் அடிப்படை உரிமைகள் தொடர்பான 3 ஆம் அத்தியாயத்தின் மீது விசேட கவனத்துடன் இலங்கையின் அரசியலமைப்புச் சட்டம்<br>xii. கல்விக்குரியதான மாகாணங்களால் விதிக்கப்பட்டுள்ள பிரகடனங்கள் |
| 04 | Communication Skills | This is to assess the English language competence of the following subject areas.<br>- **English Grammar** :-<br>Tense and Number, Sentences (Simple/ Compound / Complex / Compound Complex), Relative Clauses, Adjectives and Adverbs, Prepositions<br>- **Communication Competencies** :-<br>General Greetings and Introductions, Giving and getting information, Advising, Suggesting and Expressing Opinions, Telephone Skills, Interviewing Skills, Meeting<br>- **Writing Skills** :-<br>Internal modes of communication, Formal correspondence skills, Writing Descriptions/ Explanations, Summary Writing skills, Report Writing skills |

**கருத்தில் கொள்க:** பரீட்சார்த்திகள் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு வினாத் தாள்களுக்கும் 40% புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

04. **பரீட்சை மொழி மூலம் :**

4.1 இப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடைபெறும். பரீட்சைக்கு விண்ணப்பித்த மொழி மூலம் பின்னராக மாற்றம் செய்யப்பட இடமளிக்கப்படமாட்டாது.

4.2 இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையில் இணைவதற்கு தகைமை பெற்ற மொழி மூலத்தையே இப் பரீட்சைக்குரிய மொழி மூலமாகவும் தெரிவு செய்தல் வேண்டும்.

4.3 விண்ணப்பதாரர் ஒருவர் தமக்கு உரித்தற்ற மொழிமூலம் ஒன்றில் பரீட்சைக்கு தோற்றுவது வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தி அந்தஸ்து இரத்துச் செய்யப்படும்.

05. நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப் படிவம் ஆங்கில மொழியிலேயே பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் நிகழ்நிலை மூலமாக சமர்ப்பித்த மென் பிரதி மற்றும் பதிவுத் தபால் மூலமாக அனுப்பிவைக்கப்பட்ட அச்சுப் பிரதி (Printout) ஆகிய இரண்டும் பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற பின்னர் அம் மென் பிரதி மற்றும் அச்சுப் பிரதி ஆகியவற்றை சரிபார்த்து (Verify) செல்லுபடியான விண்ணப்பப் படிவம் என்பதாக பரீட்சைத் திணைக்களத்தினால் ஏற்றுக் கொண்டமை தொடர்பில் நிகழ்நிலை முறைமையினுள் பிரவேசிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசிக்கு குறுந்தகவல் (SMS) ஒன்றின் மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறியத் தரப்படும். நிகழ்நிலை விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்த முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள ஆலோசனைப் படிவத்தை (Instructions) பதிவிறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தும் போது அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளை முறையாக பின்பற்றவும். விண்ணப்பப் படிவத்தின் அச்சுப் பிரதியொன்றைப் பெற்ற பின்னர் அதில் செய்யப்படும் எந்தவொரு திருத்தங்களும் செல்லுபடியான திருத்தங்களாக கருத்தில் கொள்ளப்படமாட்டாது. பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்கள் எந்தவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியின் பின்னராக கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இப் பரீட்சைக்கு விசேட தேவைகளுடன் கூடிய விண்ணப்பதாரர்கள் தோற்றுவார்களாயின் அது தொடர்பில் விண்ணப்பப் படிவத்தில் கட்டாயமாக குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன், உரிய மருத்துவச் சான்றிதழ்களின் பிரதிகளும் விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

06. இப் பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் கொழும்பில் நடாத்தப்படும் என்பதுடன், பரீட்சையை நடாத்துவதற்காக அவரால் விதிக்கப் படும் சட்ட விதிமுறைகளை பின்பற்றுவதற்கு பரீட் சார்த்திகள் கட்டுப்பட வேண்டும்.

07. போலியான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை – விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தும் போது மிகுந்த கவனத்துடன் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப் பரீட்சைக்குரிய விதிமுறைகளுக்கு அமைவாக எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகுதியற்றவர் என்பதாக, போலியான தகவல்களை வழங்கியுள்ளார் என்பதாக வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் வேளையில் அல்லது பரீட்சைக்கு பின்னர் என எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி அந்தஸ்து இரத்துச் செய்யப்படலாம்.

08. விண்ணப்பப் படிவத்தின் அச்சுப் பிரதி 2025, திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னராக “பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனப் பரீட்சைகள் ஒழுங்குபடுத்தல் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு” எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்பிவைத்தல் வேண்டும். அத் தினத்தின் பின்னராக அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2025” என்பதாக குறிப்பிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

09. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் அனைத்து பாடங்களின் போதும் பரீட்சை மண்டப பிரதானி திருப்தியடையக் கூடிய வகையில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக கீழ்வரும் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

I. தேசிய ஆளடையாள அட்டை;

II. செல்லுபடியாகும் வெளிநாட்டுப்பயணக் கடவுச் சீட்டு;

III. செல்லுபடியாகும் இலங்கைச் சாரதி அனுமதிப் பத்திரம்.

மேலும், பரீட்சை எழுதுபவர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையிலும், முகத்தையும் இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களையும் அணியவில்லை என்பதை உறுதிப்படுத்தக்கூடிய வகையிலும், காதுகளை மறைக்காமல் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். இந்த விதிகளைப்

பின்பற்ற மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். அத்துடன், பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த திலிருந்து பரீட்சை முடிந்து வெளியேறும் வரை முகம் மற்றும் காதுகளை மறைக்காமல் இருக்க வேண்டும்.

10. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியுடையவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்ற முன் முடிவின் பேரில், விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவங்களைச் சமர்ப்பித்த விண்ணப்ப தாரர்களுக்கு மட்டுமே பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் நிகழ்நிலை (online) மூலமாக வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன், இலங்கை பரீட்சைத் திணைக்களம் அது தொடர்பில் குறிப்பிட்டு இணையத்தளத்தில் அறிவித்தல் மூலமாக / விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தி மூலமாக அறிவிக்கும். தமது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் யாரேனும் இருந்தால், அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளபடி அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புப் பிரிவில் விசாரிக்க வேண்டும். அவ்வாறு விசாரிக்கும்போது, விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்ப தாரரின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டு, இணையத்தள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு கோரிக்கைக் கடிதத்தை அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும் போது, பரீட்சைகள் திணைக்களத்தால் கோரப்படும் ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் புகைப்பட நகல், பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் அவசியமெனில் அதற்கான பற்றுச்சீட்டின் புகைப்பட நகல் மற்றும் விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் செய்தபோது பெறப்பட்ட பதிவு செய்யப்பட்ட பற்றுச் சீட்டு ஆகியவற்றை தயாராக வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். அனுமதி அட்டையைச் சரிபார்த்து, ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், உரிய கால அவகாசத்துடன் பரீட்சைகள் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப உரிய திருத்தங்களைச் செய்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் திருத்தங்களுக்காகச் செய்யப்படும் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

11. பரீட்சைகளுக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரின் கையொப்பம் நிறுவனத்தின் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளன்றே கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை நிலையப் பிரதானியிடம் சமர்ப்பிக்க வேண்டும். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு விண்ணப்பதாரரும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்

12. **பரீட்சைக் கட்டணம்:**

(அ) இந்தப் பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணங்கள் எந்தக் காரணம் கொண்டும் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது என்பதுடன், வேறு பரீட்சைக் கட்டணத்திற்கு மாற்றவும் அனுமதிக்கப்பட மாட்டாது.

(ஆ) இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பின்வரும் அடிப்படையின் கீழ் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டும்.

i. முதல் தடவைக்கு கட்டணம் அறவிடப்பட மாட்டாது.
ii. அதன் பின்னர் ஒவ்வொரு தடவைக்கும் பின்வருமாறு பரீட்சைக் கட்டணம் அறவிடப் படும்.

முழுப் பரீட்சைக் கட்டணம் ரூ. 500.00

ஒரு பாடத்திற்கான கட்டணம் ரூ. 250.00

பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்துகையில், நிகழ்நிலை முறைமையினால் வழங்கப்படும் பின்வரும் கட்டணச் செலுத்தும் முறைகளின் கீழ் மட்டுமே கட்டணம் செலுத்தப்பட வேண்டும்

i. எந்தவொரு வங்கி கடன் அட்டை மூலமாகவும் (Any Bank Credit Card)
ii. இணையப் பரிவர்த்தனை வசதியுள்ள எந்த வொரு வங்கிப் பற்று அட்டை மூலமாகவும் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)
iii. இலங்கை வங்கியின் இணையவழி வங்கிச் சேவை முறைமை மூலமாகவும் (Online Banking Method of Bank of Ceylon)
iv. இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையின் மூலமாகவும் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு:

(அ) மேற்கூறப்பட்ட முறைகள் மூலம் கட்ட ணங்களைச் செலுத்தும் விதிகள் தொடர் பான அறிவுறுத்தல்கள் இணையதளத்தில்

பரீட்சைக்குரிய தொழில் நுட்ப ஆலோசனைகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) கட்டணம் பெறப்பட்டமை ஒரு குறுஞ் செய்தி மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையும் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணத்தை குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்திய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்ட கட்டணச் செலுத்தும் முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்துகையில் ஏற்படும் தவறுகளுக்கு இலங்கை பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது

13. பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணபதாரர்களினதும் பெறுபேறுகள் அடங்கிய ஆவணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்படும். விண்ணப்பதாரர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் பெறுபேறு ஆவணங்களை வழங்குதல் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட மாட்டாது

14. பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் உட்பட்டவர்கள். அவ்விதிமுறைகளை மீறினால், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உள்ளாவார். பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானது

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவிப்பில், மொழி வசனங்களிடையே ஏதேனும் முரண்பாடு காணப்படுமாயின், சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கு அமைய செயற்படப்படும்

16. இந்த அறிவிப்பில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் இருக்குமாயின், அது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் உரிமை கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சின் செயலாளருக்கு உண்டு.

நாலக களுவெவ.
செயலாளர்.

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்ல,
2025, நவெம்பர் 06.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின்**
**தரம் III உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2025**
**First Bar Examination for the Officers in Grade III of Sri Lanka Teacher Educators' Service-2025**

விண்ணப்பப்படிவம் நிறுவனத் தலைவர் ஊடாகப் பதிவுத் தபால் மூலம் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவனப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புப் பிரிவு, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி 1503, கொழும்பு" என்ற முகவரிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். (பரீட்சையின் பெயரை உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.)
உத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :-

சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

01. (i) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்): ...................................................................
(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ii) இறுதியில் வரும் பெயரை முதலில் இட்டும், ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களைப் பின்னர் இட்டும் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் : …………………………………………
(உதா: GUNAWARDHANA, H.M.S.K.)

(iii) முழுப் பெயர் (சிங்களம்/ தமிழில்): ..........................................................................

02. (i) சேவையாற்றும் கல்வியியல் கல்லூரி / ஆசிரியர் கல்லூரி / ஆசிரியர் மத்திய நிலையம் மற்றும் முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) அனுமதி அட்டைகள் இந்த முகவரிக்கு அனுப்பப்படும்:
……………………………………………………………………………………

(ii) தனிப்பட்ட முகவரி ( ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)
……………………………………………………………………………………

03. தொலைபேசி இலக்கம் :

(i) கையடக்க : ☐☐☐☐☐☐☐☐☐☐

(ii) நிலையான : ☐☐☐☐☐☐☐☐☐☐

05. (i) தேசிய அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

(ii) பெண்/ ஆண் பால் நிலை :

ஆண் - 0
பெண் - 1 ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

05. (i) பிறந்த திகதி : வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(ii) பதவிப் பெயர் : ......................................................

06. அறிவித்தலின் இரண்டாவது பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாட இலக்கம் மற்றும் பாடத்துடன் விண்ணப்பிக்கும் பாடங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்

| *பாடம்* | *பாட இலக்கம்* |
|---|---|
| | |
| | |
| | |
| | |

07. இதற்கு முன்னர் இந்தப் பரீட்சைக்கு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ தோற்றியுள்ளீர்களா? ஆம் எனில், அந்தப் பாடங்கள், தோற்றிய வருடம் மற்றும் ஊடகம் ஆகியவற்றைக் குறிப்பிடவும்

| *பாடம்* | *வருடம்* | *மொழி மூலம்* | *பாட இலக்கம்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |

08. (i) தாங்கள் விசேட தேவைகள் உடைய விண்ணப்பதாரரா? ( ஆம் / இல்லை )
(ii) ஆம் எனில் விசேட தேவையின் தன்மை : ……………………………………………………………………
…………………………………………………………………………………………………………

09. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும், வர்த்தமானி அறிவித்தலின் 04 ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் இந்த பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு உரிமை உண்டு என்றும் நான்

உறுதியளிக்கிறேன். மேலும், பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு நான் கட்டுப்படுவேன் என்பதையும் உறுதியளிக்கிறேன்

................................

திகதி :........................................ விண்ணப்பதாரரின் கையொப்பம்

10. கையொப்பத்தை சான்றுப்படுத்தல் :

.................................. தேசிய கல்வியியல் கல்லூரியில் / ஆசிரியர் கல்லூரியில் / ஆசிரியர் மத்திய நிலையத்தில் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தராக சேவையாற்றும், தனிப்பட்ட ரீதியில் நான் அறிந்துள்ள திரு / திருமதி / செல்வி .................................................... என்பவர் ......................... ஆம் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும், அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளார் என்பதையும் / உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்பதையும் நான் சான்றுப்படுத்துகிறேன்

.......................................................

சான்றுப்படுத்துபவரின் கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும்
(அண்மித்த பதவி நிலை உத்தியோகத்தர்)

பெயர் : …………………………………………..
பதவிப் பெயர் : …………………………………………..
முகவரி : …………………………………………..
திகதி : …………………………………………..

11. பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,

இலங்கை பரீட்சைகள் திணைக்களம்

மேலே விபரம் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சார்த்தி இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர் என்பதையும், வர்த்தமானி அறிவித்தலின் 04 ஆம் பந்தியின் படி அவர் குறிப்பிட்டுள்ள மொழி மூலத்தில் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியுடையவர் என்பதையும் நான் சான்றுப்படுத்துகிறேன். பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணத்தில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளார் என்பதையும் / உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்பதையும் சான்றுப்படுத்துகிறேன்

............................................................

பீடாதிபதி / ஆசிரியர் கல்லூரி அதிபர் / மத்திய
நிலைய முகாமையளரின் கையொப்பம்

பதவிப் பெயர்: …………………………………
(பதவி முத்திரை)
(பொருந்தாத சொற்களை வெட்டிவிடவும்.)

11-384

## வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு

## இலங்கை வெளிநாட்டு சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் மற்றும் வெளிநாட்டு மொழி தொடர்பிலான பரீட்சை - 2025

இலங்கை வெளிநாட்டு சேவை அதிகாரிகளுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் மற்றும் வெளிநாட்டு மொழிப் பரீட்சை, 2026 பெப்ரவரி மாதம் கொழும்பில் நடைபெறும் என இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

02. வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் இரண்டும் ஒரே நேரத்தில் பரீட்சார்த்திகள் தோன்றும் வகையில் நேரசூசி தயாரிக்கப்படும்.

03. **பாடத்திட்டம்:**

முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளை முறைப்படுத்தும் பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஏற்பாடுகள் இலங்கை வெளிநாட்டுச் சேவைப் பிரமாணக்குறிப்பில் உள்ளடக் கப்பட்டுள்ளன.

முதல் மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் மற்றும் வெளிநாட்டு மொழிப் பரீட்சை தொடர்பான பாடத்திட்டங்கள் மற்றும் ஏற்பாடுகள் இணைப்பு "அ" இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதிகாரிகள் தங்கள் விருப்பப்படி, ஒரே அமர்வில் அல்லது வெவ்வேறு அமர்வுகளில் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் பாடங்களுக்குத் தோற்று வதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

04. வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கு அதிகாரிகள் தோற்ற வேண்டிய பாடங்கள் பின்வருமாறு:

**முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை**

| *பாட எண்* | *பாடம்* | *நேரம் மணித்தியாலங்கள்* |
|---|---|---|
| பகுதி I | | |
| 01 | நிதியியல் | 03 |
| 02 | இலங்கையின் வரலாறு மற்றும் புவியியல் | 03 |
| பகுதி II | | |
| 03 | அடிப்படை அரசியலமைப்புச் சட்டம் மற்றும் சர்வதேச சட்டம் | 03 |
| 04 | இராஜதந்திர நடைமுறை | 03 |
| 05 | சர்வதேச விவகாரங்கள் | 03 |
| 06 | இலங்கை வெளிநாட்டு சேவை பிரமாணக் குறிப்பு, வெளி நாட்டு அலுவல்கள் அமைச்சின் விதிமுறைகள் மற்றும் கணினித்திறன் | 03 |

**இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை**

| *பாட எண்* | *பாடம்* | *நேரம் மணித்தியாலங்கள்* |
|---|---|---|
| பகுதி I | | |
| 21 | இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி | 03 |
| 22 | நிர்வாகம்<br>(அ) அலுவலக அமைப்புகள் மற்றும் அமைப்பின் முறைகள்<br>(ஆ) தாபன விதிக்கோவை (தொகுதி I மற்றும் II) | 03 |
| பகுதி II | | |
| 23 | அடிப்படை அரசியலமைப்பு சட்டம் மற்றும் சர்வதேச சட்டம் | 03 |
| 24 | இராஜதந்திர நடைமுறை | 03 |
| 25 | சர்வதேச விவகாரங்கள் | 03 |

**வெளிநாட்டு மொழிகள்**

| *பாட எண்* | *பாடம்* | *நேரம் மணித்தியாலங்கள்* |
|---|---|---|
| 07 | அரபு மொழி | 02 |
| 08 | பிரெஞ்சு மொழி | 02 |
| 09 | ரஷ்ய மொழி | 02 |
| 10 | ஸ்பானிய மொழி | 02 |

| *பாட எண்* | *பாடம்* | *நேரம் மணித்தி யாலங்கள்* |
|---|---|---|
| 11 | ஹிந்தி மொழி | 02 |
| 12 | சீன மொழி | 02 |
| 13 | ஜெர்மனிய மொழி | 02 |
| 14 | ஜப்பானிய மொழி | 02 |
| 15 | இத்தாலிய மொழி | 02 |
| 16 | கொரிய மொழி | 02 |

05. இவ்வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை களுக்குத் தோற்றும் அலுவலர்களின் கவனத்திற்கென, கீழே மேற்கோள் காட்டப்பட்ட 1966, செத்தெம்பர் 4 என திகதியிடப்பட்ட 701 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி கீழே தரப்பட்டுள்ளது.

"திணைக்களப் பரீட்சைகள் (பதவி உயர்வு சார்ந்த மற்றும் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் உட்பட) பதவி உயர்வுசார்ந்த பரீட்சைகள் மற்றும் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளுக்கான மொழிமூலமானது, குறித்த அலுவலர்கள் அரசாங்க சேவையில் சேர்வதற்காக போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழியாக அல்லது அரசகரும மொழியாக இருத்தல் வேண்டும். போட்டிப்பரீட்சையின்றி அடிப்படை ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கும் பட்சத்தில், பதவி உயர்வு சார்ந்த / வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கான மொழிமூலமானது, குறித்த அலுவலர் அரசாங்க சேவையில் சேர்வதற்கு தகைமை பெற்ற மொழியாக அல்லது அரசகரும மொழியாக இருத்தல் வேண்டும்."

05.1 **பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுதல்:**

பரீட்சார்த்திகள் ஒவ்வொரு பாடத்திலும் சித்தி யடைவதற்கு 40% அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் 1 ஆம் மற்றும் 2 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கான பெறுபேறுகள் அடங்கிய இரண்டு வெவ்வேறான பெறுபேற்றுப் பத்திரங்கள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

06. பரீட்சார்த்திகள் வெளிநாட்டு மொழிகளுக்கான வினாப் பத்திரங்கள் தவிர்ந்த வினாப்பத்திரங்களுக்கு சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் விடையளிப்பதற்கான ஒழுங்குகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும். பரீட்சைக்குத் தொற்றுவதற்கென விண்ணப்பித்த மொழி மூலம் பின்னர் மாற்றப்பட மாட்டாது.

07. பரீட்சார்த்தியொருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்தற்ற ஒரு மொழி மூலத்தில் தோற்றியுள்ளார் என்பது பின்னர் கண்டறியப்படின், அவரது பரீட்சார்த்தி நிலை இரத்துச்செய்யப்படும்.

08. விண்ணப்பப்படிவங்கள் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக, 1 இல் இருந்து 8 வரையுள்ள விடயங்கள் முதலாம் பக்கத்திலும், மீதி விடயங்கள் 2 ஆம் பக்கத்திலும் அமையுமாறு A4 தாளொன்றில் தயாரிக்கப்பட வேண்டும். தாளின் இருபக்கங்களும் பயன்படுத்தப்பட வேண்டும். விண்ணப்பங்கள் விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தில் தெளிவாகத் தயாரிக்கப்படல் வேண்டும். சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலம் தயாரிக்கப்படும் விண்ணப்பங்களில் பரீட்சையின் பெயர் ஆங்கிலத்திலும் குறிப்பிடப்பட வேண்டும். இரண்டு பரீட்சைகளுக்கும் தோற்றும் பரீட்சார்த்திகள் ஒவ்வொரு பரீட்சைக்கு தனித்தனியான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைவாகத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தேவை யான தகவல்களைக் கொண்டிருக்காத விண்ணப் பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படும் என்பதால், விண்ணப்பதாரர் குறித்த விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதியொன்றை தன்வசம் வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். விண்ணப்படிவம் அனுப்பப்படுவதற்கு முன், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவமானது பரீட்சை தொடர்பில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்துடன் ஒத்துள்ளதா என்பதையும், அதில் கோரப்பட்டுள்ள எல்லா விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதையும், கொடுப்பனவுக்கான பற்றுச்சீட்டு விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டுள்ளதா என்பதை யும் விண்ணப்பதாரர் சரிபார்த்துக்கொள்ள வேண்டும்.

09. **பொய்யான தகவலை வழங்குவதற்கான தண்டனை:**

விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது, சரியான தகவல் வழங்குவதில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின்படி விண்ணப்பத்தாரரொருவர் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ தகுதியற்றவரெனக் கருதப்படுமிடத்து, அவரது பரீட்சார்த்தி நிலை இரத்துச்செய்யப்படும்.

10. பரீட்சைகள், பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால் நடாத்தப்படும் என்பதுடன், பரீட்சையை நடாத்தும் பொருட்டு பரீட்சைகள் நாயகத்தினால் விதித்துரைக்கப்படும் விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்ட வர்களாக இருப்பர். பரீட்சை நடைமுறை தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப் படும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் உட்பட்டவராவர். அத்தகைய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளை மீறும் எந்தவொரு பாரீட்சார்த்தியும் பரீட்சைகள் ஆணையாளர் நாயக்கத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக்கப்படுவார். பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் முடிவே இறுதியானது.

11. அனைத்து விண்ணப்பதாரிகளும் தமது விண்ணப் பங்களை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கும் பொருட்டு அவற்றை வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் மனித வளங்கள் மற்றும் தூதரக முகாமைத்துவப் பிரிவுக்கு 2025, திசெம்பர் 12 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அனுப்பி வைத்தல் வேண்டும். வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதாகங்களில் பணியாற்றுவோர் தமது விண்ணப்பங்களை தூதரகத் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும். முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணங்கள் நிராகரிக்கப்படும்.

12. தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளோர் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனரென்ற அனுமானத்தின் பேரில், விண்ணப்ப முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ, உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப் பங்களையும், இணைக்கப்பட்டுள்ள அறிவித்தலின் பிரகாரம் தேவையான பரீட்சைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டதற்கான பற்றுச்சீட்டுக்களையும் விண்ணப்பத்துடன் இணைத்துள்ள அனைத்து விண்ணப்பதாரிகளுக்குமான அனுமதி அட்டைகள், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால், இணையதள அறிவிப்பொன்று வெளியிடப்படும் அல்லது குறுஞ்செய்தி மூலம் பரீட்சார்த்திகளுக்கு இது குறித்து அறிவிக்கப்படும். இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 02 அல்லது 03 நாட்களுக்குப் பின்னரும் விண்ணப்பதாரரொருவருக்கு, அவருடைய அனுமதி அட்டை கிடைக்கவில்லையாயின், வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவன பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையில் அது குறித்து விசாரிக்க வேண்டும். அவ்வாறு விசாரணைகளை மேற்கொள்ளும் போது, விண்ணப்பதாரர், விண்ணப்பித்த தேர்வின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டு ஒரு கோரிக்கைக் கடிதமொன்றை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புவது பயனுள்ளதாக இருக்கும். அத்தகைய கோரிக்கையின் போது பரீட்சைத் திணைக்களத்தால் கோரப்படும் எந்தவொரு தகவலையும் உறுதிப்படுத்துவதற்காக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நகல், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டமைக்கான பற்றுச்சீட்டு / பொருந்துமாயின், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டமைக்கான பற்றுச்சீட்டின் நகல் மற்றும் விண்ணப்பத்தை அஞ்சல் மூலம் அனுப்பியமை பதிவு செய்யப்பட்டபற்றுச்சீட்டுஆகியவற்றைவைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். அனுமதி அட்டையைச் சரிபார்த்த பிறகு, ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், பரீட்சைகள் திணைக்களத்தை உரிய நேரத்தில் தொடர்பு கொண்டு, விண்ணப்பத்தின்படி திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். திருத்தங்களுக்காக பரீட்சை மண்டபத்தில் மேற்கொள்ளப்படும் கோரிக் கைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

12.1 விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி அட்டையொன்று வழங்கப்படுவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வேண்டப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதாகவோ அல்லது குறித்த பதவிக்குத் தகுதியுடையவர் என்பதாகவோ கருதப்படலாகாது.

12.2 விண்ணப்பதாரர் விண்ணப்பத்திலும், அனுமதி அட்டையிலும் தனது கையொப்பத்தையிட்டு, அதை நிறுவனத் தலைவராலோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவராலோ அத்தாட்சிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

13. மேலேயுள்ள 12 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளைப் பின்பற்றத்தவறி, அதன் பின்னர் பரீட்சார்த்திகளால் மேற்கொள்ளப்படும் மேன்முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. பரீட்சார்த்திகள் தமக்கென குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தனது கையொப்பத்துடன் கூடிய, சான்றுப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். தமது அனுமதி அட்டையினை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

14. பரீட்சார்த்திகள், பரீட்சை மண்டபத்தின் பொறுப் பதிகாரியிடம் தாங்கள் எழுதும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளரின் திருப்திக்கு ஏற்ப தங்கள் அடையாளத்தை நிரூபிப்பது அவசியமாகும். அதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதாயினும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய அடையாள அட்டை:
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு:
(ii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும், பரீட்சார்த்திகள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காகவும் இலத்திரனியல் தொடர் பாடல் சாதனங்கள் பயன்படுத்தப்படவில்லை என்பதை உறுதி செய்யும்பொருட்டும் முகத்தையும், காதுகளிரண்டையும் மறைக்காத வண்ணம் சமுகமளிக்க வேண்டும். தமது அடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். அத்தோடு, பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த நேரத்திலிருந்து, பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரை, மேற்பார்வை அதிகாரிகளுக்கு அடையாளம் கண்டுகொள்ளும் பொருட்டு காதுகளையும், முகத்தையும் மறைக்காமல் இருப்பது அவசியம்.

15. முதல் தடவையாக குறித்த பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுவதுடன், தொடர் அமர்வுகளுக்கான பரீட்சைக் கட்டணங்கள் பின்வரும் அடிப்படையில் அமையும்:

(அ) முதலாவது அமர்வுக்கு (முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் பகுதிக்கும்) கட்டணமெதுவும் அறவிடப்படமாட்டாது.

(ஆ) அதன் பின்னரான ஒவ்வொரு அமர்வுக்கும்

| | ரூ.சதம் |
|---|---|
| முழுப் பரீட்சைக்கு | 1200.00 |
| ஒரு பாடத்திற்கு | 600.00 |

பரீட்சைக்கட்டணமானது, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 20-03-02-13 எனும் வருமானத் தலைப்பின் கீழ் வரவு வைக்கப்படும் வகையில், நாட்டிலுள்ள எந்தவொரு தபால் அல்லது உப தபால் அலுவலகத்தில் அல்லது வெளிநாட்டுத்தூதரகத்தில் செலுத்தப்பட்டு, விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் உறுதியாக ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணங்கள் தொடர்பில் காசுக் கட்டளைகளோ முத்திரைகளோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீளளிக் கப்படவோ அல்லது வேறொரு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டா. பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை பரீட்சார்த்தி தன்வசம் வைத்திருத்தல் பயனுள்ளது.

16. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத எந்தவொரு விடயம் தொடர்பிலும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியானதாகும். பரீட்சைகள் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாகும்.

17. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்பட்டுள்ள இவ்வறிவித்தலின் கூற்றுக் களுக்கிடையே மாறுபாடோ அல்லது முரண்பாடோ காணப்படுமிடத்து, சிங்கள அறிவித்தலே கருத்திற் கொள்ளப்படும்.

அருணி ரணராஜா,
வெளிநாட்டு அலுவல்கள்,
வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும்
சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு
வேலைவாய்ப்பு மற்றும்
சுற்றுலாத்துறை அமைச்சு,
குடியரசுக் கட்டிடம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு

☐
(அலுவலக பாவனைக்கு மட்டும்)

இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள அலுவலர்களுக்கான 1 ஆம், 2ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை மற்றும் வெளிநாட்டு மொழிப்பரீட்சை- 2025

விண்ணபதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்
(பொருத்தமான இலக்கத்தை கட்டத்தினுள் இடுக)

சிங்களம் 2
தமிழ் 3 ☐
ஆங்கிலம் 4

01. விண்ணப்பிக்கப்பட்ட பரீட்சை:
(உரிய இலக்கத்தைக் கட்டத்தினுள் இடுக) ☐

| *பரீட்சை* | *உரிய இல.* |
|---|---|
| வினைத்திறன்காண் தடை தாண்டல் 1 | 1 |
| வினைத்திறன் காண் தடை தாண்டல் 2 | 2 |
| வெளிநாட்டு மொழி | 3 |

02. (அ) (i) முதலெழுத்துக்களுடனான பெயர் (தமிழில்/சிங்களத்தில்) ..............................................................
..............................................................

(ii) முதலெழுத்துக்களுடனான பெயர் (ஆங்கிலப் பேரெழுத்துக்களில்):
..............................................................

(ஆ) (i) முழுப் பெயர் (தமிழில்/சிங்களத்தில்) :
..............................................................
(ii) முழுப் பெயர் (ஆங்கிலப் பேரெழுத்துக்களில்)
..............................................................

03. முகவரி (அனுமதி அட்டை அனுப்புவதற்காக) (ஆங்கிலப் பேரெழுத்துக்களில்): ..............................................................
..............................................................

04. பிறந்த திகதி: வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

05. தேசிய அடையாள அட்டை இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

06. கையடக்க தொலைபேசி இல: ☐☐☐☐☐☐☐☐☐☐

07. பால் :
ஆண் - 0
பெண் - 1 ☐

08. இலங்கை வெளிநாட்டுச் சேவையில் நியமனத் திகதி : வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

09. தற்போதைய பதவி: .................................................

10. இவ்வறிவித்தலின் 4 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள பரீட்சைக்குரிய பாட எண்களைச் குறிப்பிடவேண்டும் (விண்ணப்பத்தில் குறிப்பிட்ட பாடங்களுக்குத் தோற்றுவதற்கு மட்டும் பரீட்சார்த்தி அனுமதிக்கப்படுவார்).

| *பாடம்* | *பாட இல.* |
|---|---|
| i. | |
| ii. | |
| iii. | |
| iv. | |
| v. | |
| vi. | |

11. பரீட்சார்த்தி ஏற்கனவே முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றியிருந்தாரா என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறெனில் பரீட்சைச் சுட்டெண், பாடங்கள், வருடம் மற்றும் மாதம் என்பவற்றைச் குறிப்பிடுக.
....................................................................................

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவை யெனவும் மேற்குறிப்பிட்ட மொழி மூலம் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் தகுதியுடையவராவேன் எனவும் நான் வெளிப்படுத்துகின்றேன். மேலும், இந்தப் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதித்துரைக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கேற்ப செயற்படுவதற்கு நான் இணக்கம் தெரிவிக்கின்றேன்.

பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டதற்கான .......................... ஆம் இலக்கப் பற்றுச்சீட்டும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

செலுத்தப்பட்ட கட்டணம் ரூபா.......................................

..........................                                        ...........................................
திகதி                                        விண்ணப்பதாரர் கையொப்பம்

**பரீட்சைக் கட்டணம் :**

I கட்டணம் செலுத்திய தபால் அலுவலகம்/ உப தபால் அலுவலகம்/ வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகம்:
II செலுத்திய தொகை:
III செலுத்திய திகதி:
IV பற்றுச்சீட்டு இல:

பற்றுச்சீட்டின் மூலப்பிரதி இங்கே ஒட்டப்பட வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியை வைத்துக்கொள்ளவும்)

12. திணைக்களத் தலைவரின் சான்றளிப்பு:

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,

மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் சரியானவை எனவும் விண்ணப்பதாரரான திரு./ திருமதி/ செல்வி ........................ ................ என்பவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலமாக இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு அவர் தகுதியுடையவர் என்பதையும் நான் உறுதிப்படுத்துகின்றேன். மேலும் அவரது கையொப்பத்தையும் அவர் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்பதையும் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளதையும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவியும்: ...............

திகதி:.......................... (உத்தியோகபூர்வ முத்திரை)

**பின்னிணைப்பு 'அ'**

01. **முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை:**

1.1 முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை இரண்டு பகுதிகளைக் கொண்டதாக அமைவதுடன் அலுவலர்கள் ஒரே அமர்வில் அல்லது வெவ்வேறான அமர்வுகளில் இரு பகுதிகளிலும் தோற்றலாம்.

1.2 இப்பரீட்சை பின்வரும் பாடங்களில் நடாத்தப்படும்.

பகுதி I

(i) நிதியியல் : இப்பரீட்சை பின்வரும் விடயப் பரப்புக்களின் அடிப்படையில் அமையும்

(அ) இலங்கை அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் பகுதி I (அத்தியாயம் X நீங்கலாக)

(ஆ) நடைமுறை ஆண்டின் மதிப்பீடுகள். உ+ம்: ஒழுங்குகள், வருமானத் தலைப்புகள், நிதி மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டங்கள்

(இ) செயலகங்கள் (கச்சேரிகள்) மட்டத்தில் கையாளப்படும் குறிப்பிட்ட கணக்குகள் தொடர்பான கட்டளைச் சட்டங்கள்.

(ii) இலங்கையின் வரலாறும் புவியியலும்:

**பகுதி II - சிறப்பு வினாப்பத்திரங்கள் :**

(i) அடிப்படை அரசியலமைப்புச் சட்டம் மற்றும் சர்வதேச சட்டம்
(ii) இராஜதந்திர செயன்முறை
(iii) சர்வதேச விவகாரங்கள்
(iv) இலங்கை வெளிநாட்டுச் சேவை பிரமாணக் குறிப்பு, வெளிநாட்டு அமைச்சு ஒழுங்குவிதிகள் மற்றும் கணினித்திறன்

1.3 மேற்படி வினாப்பத்திரங்கள் ஒவ்வொன்றும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்டிருப்பதுடன், அவற்றில் சித்தியடைவதற்கு பரீட்சார்த்திகள் ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 40% வீதமான அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற வேண்டும்.

1.4 ஒரு அலுவலர் ஒவ்வொரு வினாத்தாளையும் தனித்தனியாக எத்தனை முறை வேண்டுமானாலும் எழுத அனுமதிக்கப்படுவார். மேலும், தகுதி மதிப்பெண்களைப் பெற்றவுடன், அந்த வினாத்தாளில் தேர்ச்சி பெற்றதாகக் கருதப்படுவார்.

02 . **இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை :**

2.1 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை இரண்டு பகுதிகளைக் கொண்டதாக அமைவதுடன், அலுவலர்கள் ஒரே அமர்வில் அல்லது வெவ்வேறான அமர்வுகளில் இரு பகுதிகளுக்கும் தோற்றலாம்.

2.2 பின்வரும் பாடங்களில் பரீட்சை நடாத்தப்படும் :

பகுதி I

(i) இலங்கையின் பொருளாதார, சமூக அபிவிருத்தி,
(ii) நிர்வாகம் - இவ்வினாப்பத்திரம் பின்வரும் விடயப்பரப்பை உள்ளடக்கியிருக்கும்:

(அ) அலுவலக முறைமைகளும் ஒழுங்கமைப்பு முறைமைகளும்.

(ஆ) தாபன விதிக்கோவை - தொகுதி I மற்றும் தொகுதி II

பகுதி II

(i) அடிப்படை அரசியலமைப்புச் சட்டம் மற்றும் சர்வதேச சட்டம்:
(ii) இராஜதந்திர செயன்முறை:
(iii) சர்வதேச விவகாரங்கள்.

2.3 மேற்படி வினாப்பத்திரம் ஒவ்வொன்றும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்டிருப்பதுடன், சித்தியடைவதற்கு பரீட்சார்த்திகள் ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% வீதமான அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறவேண்டும்.

2.4 ஒரு அலுவலர் ஒவ்வொரு வினாத்தாளையும் தனித்தனியாக எத்தனை முறை வேண்டுமானாலும் எழுத அனுமதிக்கப்படுவார். மேலும், தகுதி மதிப்பெண்களைப் பெற்றவுடன், அந்த வினாத்தாளில் தேர்ச்சி பெற்றதாகக் கருதப்படுவார்.

குறிப்பு:

(i) அரசியலமைப்புச் சட்டம் தொடர்பான வினாக்கள் பிரதானமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பிற்கான விசேட குறிப்புக்களுடனான இலங்கை அரசின் பாராளுமன்ற முறைமையை உள்ளடக்கி யிருக்கும்.

(ii) சர்வதேச சட்டம் தொடர்பான வினாக்கள் நாடுகளுக்கிடையிலான உறவுகள், இருதரப்பு மற்றும் பல்தரப்பு, அதனுடன் தொடர்புபட்ட நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர சட்டம் மாற்றும் உடன்படிக்கைச் கட்டங்கள் போன்ற விடயப்பரப்பை உள்ளடக்கியிருக்கும்.

03. **வெளிநாட்டு மொழிகள்:**

3.1. **வெளிநாட்டு மொழிகள் :**

(i) அரபு மொழி
(ii) பிரஞ்சு மொழி
(iii) ரஷ்ய மொழி
(iv) ஸ்பானிய மொழி
(v) ஹிந்தி மொழி
(vi) சீன மொழி
(vii) ஜேர்மன் மொழி
(viii) ஜப்பான் மொழி
(ix) இத்தாலிய மொழி
(x) கொரிய மொழி

3.2 மேற்குறிப்பிட்ட வெளிநாட்டு மொழிகளுக்கான எழுத்துப்பரீட்சை ஒவ்வொன்றும் இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டிருப்பதுடன், அதில் சித்தியடைவதற்கு 40% அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளை பெற வேண்டும்.

11-386

---

**விவசாயத் திணைக்களம்**

**விவசாயத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியாளர் (பொறியியல் – சிவில்) தொழில்நுட்ப உதவியாளர் (பொறியியல் – இயந்திரவியல்) மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் (பொறியியல் - மின்னியல்) ஆகிய பதவிகளின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2025**

Department of Agriculture

Open Competitive Examination for Recruitment to the Post of Technological Assistant (Engineering – Civil / Mechanical / Electrical) Grade III – 2025

விவசாயத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியாளர் (பொறியியல் – சிவில்), தொழில்நுட்ப உதவியாளர் (பொறியியல் – இயந்திரவியல்), தொழில்நுட்ப உதவியாளர் (பொறியியல் – மின்னியல்) ஆகிய பதவிகளின் தரம் III இல் 2024.10.30 ஆம் திகதி நிலவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சைக்குப் பின்வரும் தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவிப் பெயர் | திறந்த அடிப்படையில் பூர்த்தி செய்யப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| தொழில்நுட்ப உதவியாளர் (பொறியியல் – சிவில்) | 05 |
| தொழில்நுட்ப உதவியாளர் (பொறியியல் – இயந்திரவியல்) | 04 |
| தொழில்நுட்ப உதவியாளர் (பொறியியல் – மின்னியல்) | 01 |

02. விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2025.12.26 ஆம் திகதி ஆகும் என்பதுடன், அன்றைய தினத்தில் விண்ணப்பதாரியின் வயது 18 இற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

03. பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று பின்வரும் அடிப்படைத் தகைமை களையும் மற்றும் தொழிற் தகைமைகளையும் கொண்டிருத்தல் அவசியமாகும்.

| *பதவி* | *7.2.2.1 கல்வித் தகைமைகள் மற்றும் தொழிற் தகைமைகள்* |
|---|---|
| தொழில்நுட்ப உதவியாளர் (பொறியியல்-சிவில்/ பொறியியல்-இயந்திரவியல் / பொறியியல்-மின்னியல்) | பதவிக்குரிய கடமைப் பொறுப்பிற்கு உரிய வகையில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தேசிய தொழில் சார் திறன் (NVQ) ஐந்தாம் (05) மட்டத்தில் அல்லது அதிலும் கூடிய மட்டம் ஒன்றில் உள்ளடக்கப்படும் பதவிக்கு உரிய துறையில் தொழிநுட்பப் பாடநெறி ஒன்றினைக் கற்று சான்றிதழ் ஒன்றினைப் பெற்றுக்கொண்டிருத்தல். |

03.2 **ஏனைய தகைமைகள் :**

அனைத்து விண்ணப்பதாரிகளும் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் தொடர்பில் உறுதிப்படுத்தல் வேண்டும்.

- இலங்கை பிரஜையாக இருத்தல்.

- ➢ மிகச் சிறந்த நடத்தையுடையவராக இருத்தல்.
- ➢ ஏதேனும் சமயம் ஒன்றில் சமயப் பிரிவு ஒன்றின் மதத்தலைவர் ஒருவராகவுள்ள எந்த ஒருவரும் இந்தப் பரீட்சைக்காகத் தோற்றுவதற்கு தகைமை பெறமாட்டார்.
- ➢ நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பதவிக்கு உரிய கடமைகளை நிறைவேற்றுதவற்கு உரிய உடல் உள ஆரோக்கியத்தைக் கொண்டுருத்தல் வேண்டும்.

**கவனிக்கவும்** – விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதியன்று அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

04. நிலவும் வெற்றிட எண்ணிக்கையில் ஏதேனும் வெற்றிட எண்ணிக்கை ஒன்றினை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் பூர்த்தி செய்வதற்கு அல்லது பூர்த்தி செய்யாமல் இருப்பதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

05. **சம்பளம் :**

சம்பள குறியீட்டு இலக்கம் MT- 01(2025)
